08.12.2018 காலை முரளி ஓம் சாந்தி
பாப்தாதா, மதுபன்

---

இனிமையான குழந்தைகளே - ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சந்திப்பு தான் உண்மையிலும்- உண்மையான சங்கமம் அல்லது கும்பமாகும், இந்த சந்திப்பின் மூலம் தான் நீங்கள் தூய்மையாக ஆகின்றீர்கள், நினைவு சின்னத்தில் பிறகு அந்த மேளாவை கொண்டாடுகிறார்கள்.

கேள்வி:-

குழந்தைகளாகிய உங்களிடத்தில் எந்த விஷயத்தின் அதிக புத்திசாலிதனம் வேண்டும்?

பதில்:-

ஞானத்தின் என்ன நுணுக்கமான விஷயங்கள் இருக்கிறதோ, அவற்றை புரியவைப்பதற்கு மிகுந்த புத்திசாலித்தனம் வேண்டும். யுக்தியாக ஞானமார்க்கம் மற்றும் பக்திமார்க்கத்தை நிரூபிக்க வேண்டும். எப்படி எலி ஊதி பிறகு கடித்து விடுகிறதோ அதுபோல் சேவையின் யுக்தியை உருவாக்க வேண்டும். கும்ப மேளாவில் கண்காட்சி வைத்து நிறைய ஆத்மாக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாவதற்கான யுக்தியை சொல்ல வேண்டும்.

பாட்டு:-

இந்த பாவமான உலகத்திலிருந்து....................

ஓம் சாந்தி.

பாபா வந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார், பாவம் நிறைந்த உலகத்தை கலியுகம், தூய்மையற்ற, கீழான உலகம் என்று சொல்லப்படுகிறது, மேலும் புண்ணிய உலகத்தை சத்யுக, தூய்மையான, உயர்ந்த உலகம் என்று சொல்லப்படுகிறது. பரம் ஆத்மா தான் வந்து புண்ணியாத்மா, தூய்மையான ஆத்மா அல்லது புண்ணிய உலகத்தை உருவாக்குகின்றார். தூய்மையற்றவர்களை தூய்மையாக்கும் பாபாவை மனிதர்கள் அழைக்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் தூய்மையாக இல்லை. ஒருவேளை தூய்மையற்றவர்களை தூய்மை யாக்குவது கங்கை அல்லது திரிவேணி என்றால் பிறகு ஏன் ஹே! தூய்மையற்றவர்களை தூய்மையாக்குபவரே! வாருங்கள் என்று அழைக்கிறார்கள்? கங்கையோ அல்லது திரிவேணியோ இருக்கவே இருக்கிறது, அவை இருந்தும் அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் புத்தி பரமாத்மாவின் பக்கம் செல்கிறது. பரமபிதா பரமாத்மா யார் ஞானக்கடலாக இருக்கின்றாரோ அவர் வர வேண்டும். வெறும் ஆத்மா கிடையாது, ஆனால் தூய்மையான ஜீவாத்மா என்று

சொல்லப்படும். இப்போது தூய்மையான ஜீவாத்மாக்கள் யாரும் இல்லை. தூய்மையற்றவர்களை தூய்மையாக்கும் பாபா வருவதே எப்போது சத்யுக தூய்மையான உலகம் ஸ்தாபனை செய்ய வேண்டுமோ மற்றும் கலியுக உலகத்தை வினாசம் செய்ய வேண்டுமோ அப்போது தான் ஆகும். கண்டிப்பாக சங்கமயுகத்தில் தான் வருவார். சங்கமத்தை கும்பம் என்றும் சொல்கிறார்கள். திரிவேணி சங்கமத்தின் பெயரை கும்பம் என்று வைத்து விட்டார்கள். மூன்று நதிகளும் ஒன்றாக கலக்கிறது என்று சொல்கிறார்கள். உண்மையில் இரண்டு நதிகள் தான் இருக்கின்றன. மூன்றாவது நதி மறைமுகமாக இருக்கிறது என்று சொல்லி விடுகிறார்கள். இந்த கும்பமேளாவின் மூலம் தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாக ஆவார்களா என்ன? தூய்மையற்றவர்களை தூய்மையாக்குபவர் கண்டிப்பாக வர வேண்டும். அவர் தான் ஞானக்கடல் ஆவார். தூய்மையற்ற உலகத்தை தூய்மையாக்குவது, கலியுகத்தை சத்யுகமாக்குவது என்பது பரமபிதா பரமாத்மாவின் வேலையே ஆகும், மனிதர்களுடைய காரியம் இல்லை. இவையனைத்தும் குருட்டு நம்பிக்கைகளாகும். இப்போது கண்ணில்லாதவர்களுக்கு ஊன்றுகோல் வேண்டும். இப்போது நீங்கள் வரிசைக் கிரமமான முயற்சியின்படி ஊன்றுகோலாக ஆகியுள்ளீர்கள். விதவிதமான

ஊன்றுகோல்கள் இருக்கின்றன. சில ஊன்றுகோல்கள் 100 ரூபாயாக இருக்கிறது மற்றும் சில இரண்டு ரூபாய்க்கும் கிடைக்கிறது. இங்கேயும் கூட அனைவரும் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். சிலர் மிகுந்த சேவாதாரிகளாக இருக்கிறார்கள். நோயுறும்போது தான் டாக்டரை அப்போது அழைக்க வேண்டியிருக்கிறது. இப்போது இந்த உலகமே தூய்மையற்றதாகும். நீங்கள் தூய்மையாகிக் கொண்டிருக்கிறீர்கள். ஆத்மாவும் பரமாத்மாவும் நீண்டகாலம் பிரிந்திருந்தன என்று சொல்லப்படுகிறது. பிறகு பரமபிதா பரமாத்மா அனேக ஆத்மாக்களுக்கு இடையே வரும்போது அதனை சங்கமம் என்று சொல்லப்படுகிறது.

மனிதர்கள் கும்பமேளாவில் நிறைய தானம் செய்கிறார்கள். அந்த வருமானம் சாது-சன்னியாசிகளுக்கும் அரசாங்கத்திற்கும் கிடைக்கும். இங்கே நீங்கள் உடல்-மனம்-பொருள் உட்பட அனைத்தையும் பதீத பாவனர் பாபாவிற்கு தானம் செய்ய வேண்டியிருக்கிறது. பிறகு அவர் உங்களை எதிர்காலத்தில் சொர்க்கத்திற்கு எஜமானர் களாக மாற்றுகின்றார். அவர்கள் திரிவேணியின் பெயரால் சாது-சன்னியாசிகளுக்கு தானம் அளிக்கிறார்கள். உண்மையில் நதிகள் அனைத்தும் கடலில் சேரும் இடத்தை தான் சங்கமம் என்று சொல்ல வேண்டும்.

அங்கே கடல் இல்லை. நதிகள் ஒன்றோடு ஒன்று சேர்கின்றன. நதிகள் மற்றும் கடலின் சந்திப்பைதான் உண்மையிலும் உண்மையான சந்திப்பு என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதுவும் நாடகத்தில் பதிவாகியிருக்கிறது. இதில் அரசாங்கத்திற்கும் ரயில், பேருந்து, இடம் போன்றவைகளின் மூலம் நிறைய வருமானம் கிடைக்கிறது. எனவே இது வருமானத்தின் மேளா கூடுகிறது. இந்த விஷயங்களை குழந்தைகளாகிய நீங்கள் தீர்மானிக்கலாம் ஏனென்றால், நீங்கள் ஈஸ்வரிய வழிப்படி நடக்கின்றீர்கள். எனவே கும்பமேளாவின் அர்த்தத்தைக் கொண்டுவர வேண்டும். பாபா கட்டுரை கொடுக்கின்றார். யார் சேவாதாரி குழந்தைகள் இருக்கிறார்களோ, அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். அனைத்திலும் நம்பர் ஒன் சேவாதாரி மம்மா பிறகு இரண்டாவது சஞ்சய் ஆவார். இதனை மக்களுக்கு வினியோகிப்பதற்கு நோட்டீஸ் உருவாக்க வேண்டும். இந்த திரிவேணி தூய்மையற்றவர்களை தூய்மையாக்குவது கிடையாது. தூய்மையற்றவர்களை தூய்மையாக்குபவர் அனைவருக்கும் சத்கதியை வழங்கும் வள்ளல் ஒரு சிவபாபா ஆவார். திரிவேணியை சத்கதியை வழங்கும் வள்ளல் என்று சொல்ல முடியாது. இந்த நதிகள் இருக்கவே இருக்கின்றன. வருவதற்கான விஷயம் கிடையாது. பதீத-பாவனரே! வாருங்கள், வந்து தூய்மையாக்குங்கள்

என்று பாடுகிறார்கள், எனும்போது துண்டு பிரசுரங்களில் போட வேண்டும் - சகோதர-சகோதரிகளே, தூய்மையற்றவர்களை தூய்மையாக்குபவர் ஞானக்கடல் பரமபிதா பரமாத்மாவா அல்லது இந்த நதிகளா? இவை எப்போதும் இருக்கின்றன. பரமாத்மாவை வருவதற்கு அழைக்கப்படுகிறது. உண்மையில் தூய்மையற்றவர்களை தூய்மையாக்குபவர் ஒரு பரமாத்மா ஆவார், ஆத்மாக்கள் மற்றும் பரமாத்மா நீண்டகாலம் பிரிந்திருந்தன.......... அதே சத்குரு தான் வந்து அனைவருக்கும் சத்கதி அளித்து திரும்பி அழைத்துச் செல்கிறார். ஞானக்குளியல் உண்மையில் பரமபிதா பரமாத்மாவிடம் செய்ய வேண்டும். பரமபிதா பரமாத்மா தூய்மையான உலகத்தை ஸ்தாபனை செய்விக்கின்றார். நீங்கள் அதனை தெரிந்திருக்கவில்லை. பாரதம் உயர்ந்ததாக இருந்தபோது அதில் ஆத்ம-அபிமான தேவதைகள் இருந்தார்கள். அதனை சிவாலயம் என்று சொல்லப்படுகிறது. இப்போது குழந்தைகள் கும்பமேளாவிற்கு சென்று புரிய வைப்பதற்காக கண்காட்சி வைக்க வேண்டும். தூய்மையற்றவர்களை தூய்மையாக்குபவர் ஒரு பாபா, அவர் கூறுகின்றார் : நான் வருவதே எப்போது தூய்மையற்றவர்களை தூய்மையாக்க வேண்டுமோ அப்போது தான் என்று புரிய வைக்க வேண்டும். எனவே சத்தியம் செய்ய

வேண்டும். ரக்ஷô பந்தன் பகவானோடு சம்மந்தத்தை ஏற்படுத்துகிறது, சாது சன்னியாசிகளிடம் இல்லை. பரமபிதா பரமாத்மாவிடம் சத்தியம் செய்யப்படுகிறது, திரிவேணியிடம் இல்லை. ஹே பாபா, நாங்கள் தங்களுடைய ஸ்ரீமத்தின் மூலம் தூய்மையாவதற்கான சத்தியம் செய்கிறோம். பாபாவும் கூறுகின்றார், நான் உங்களை தூய்மையான உலகத்திற்கு எஜமானர்களாக மாற்றுவேன். என்று ஜாடை மாடையாகக் கூறுகிறார். இதில் சேவை செய்யக்கூடியவர்கள் மிகவும் கூர்மையானவர்களாக இருக்க வேண்டும். சித்திரங்கள் கூட இன்னும் உருவாக்க வேண்டும். இதற்காக மிகவும் நல்ல மண்டபத்தை எடுக்க வேண்டும். உங்களுக்கு எதிரிகள் கூட நிறைய உருவாவார்கள், சில நேரங்களில் தீ வைக்க கூட தயங்க மாட்டார்கள். யாரும் சண்டை செய்ய வேண்டும் என்றால் திட்ட ஆரம்பித்து விடுவார் கள். நீங்கள் நிர் அகங்காரிகளாக ஆகி, அமைதியில் இருக்க வேண்டும். பிரம்மா குமாரிகள் புகழ்பெற்று விட்டார்கள். நோட்டீசுகளை கண்டிப்பாக விநியோகிக்க வேண்டும். குறிப்பாக கும்பமேளாவிற்கு மகத்துவம் வைக்கிறார்கள். உண்மையில் மகத்துவம் இப்போதைக்கானதாகும், இது கூட நாடகத்தின் விளையாட்டாகும். அங்கிருந்து கூட சிலருக்கு நன்மை நடக்கலாம். ஆனால் உழைப்பு தேவைப்படுகிறது. முட்களை மலராக்குவதற்கு உழைப்பு தேவைப்படுகிறது. கும்பமேளாவில் கண்காட்சி

வைப்பதற்கும் தைரியம் வேண்டும், எந்த தடையும் ஏற்படாமல் இருக்க அறிந்தவர்கள் வேண்டும். தூய்மையற்றவர்களை தூய்மையாக்குபவர் யார் என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டும். மனிதர்கள் தூய்மையான உலகம் சொர்க்கத்தை நினைவு செய்கிறார்கள். யாராவது இறக்கிறார்கள் என்றால் இன்னார் சொர்க்கவாசி ஆகிவிட்டார் என்று சொல்வார்கள். அங்கே நிறைய செல்வங்கள் இருக்கின்றன, அங்கிருந்து இங்கே அழைத்து ஏன் படைக்கிறீர்கள்? நீங்கள் ஸ்ரீநாத் கோயிலில் பார்க்கலாம் - எவ்வளவு பதார்த்தங்கள் செய்கிறார்கள். ஸ்ரீநாத் புரி மற்றும் ஜகந்நாத் புரி, உண்மையில் ஒரே விஷயம் தான். ஆனால் அங்கே ஸ்ரீநாத் வாயிலில் பார்த்தால் நிறைய வைபவங்கள் செய்கிறார்கள் மற்றும் ஜகந்நாத் புரியில் வெறும் சாதத்தைப் படைக்கிறார்கள். நெய் போன்ற எதையும் போடுவதில்லை. இந்த வித்தியாசம் சொல்கிறது - வெள்ளையாக இருந்தால் அப்படிப்பட்ட பதார்த்தங்கள் மற்றும் கருப்பாக இருந்தால் இந்த வெறும் சாதம். இரகசியம் மிகவும் நன்றாக இருக்கிறது. இதை பாபா வந்து புரிய வைக்கின்றார். ஸ்ரீநாத்தில் இவ்வளவு போக் படைக்கிறார்கள் என்றால் பிறகு பூஜாரிகள் கடைகளுக்கும் அனுப்புகிறார்கள். அவர்களின் வருமானத்திற்கு ஆதாரமும் அதில் இருக்கிறது. இலவசமாகக் கிடைக்கிறது அதில் சம்பாதிக்கிறார்கள். எனவே பாருங்கள் எவ்வளவு

கண்மூடித்தனமான விஷயமாக இருக்கிறது. இது தான் பக்தி மார்க்கம். ஞான மார்க்கம் சத்கதி மார்க்கமாகும், கங்கையில் குளிப்பதின் மூலம் சத்கதி ஏற்படுகிறதா என்ன. மிகவும் யுக்தியோடு புரிய வைக்க வேண்டும். எலி எப்படி ஊதி ஊதி கடிக்கிறதோ அதுபோலாகும். புரிந்து கொள்வதற்கும் பிறகு புரிய வைப்பதற்கு மிகவும் புத்திசாலித்தனம் வேண்டும். எவ்வளவு நுணுக்கமான விஷயங்களாக உள்ளது. ஹே பரமபிதா பரமாத்மா! உங்களுடைய நிலையையும்-வழியையும் நீங்களே அறிவீர்கள் என்று மனிதர்கள் கூறுகிறார்கள். இதனுடைய அர்த்தத்தைப் புரிந்து கொள்வதே இல்லை. உங்களுடைய ஸ்ரீமத்தின் மூலம் கிடைக்கக் கூடிய சத்கதியை நீங்கள் தான் செய்ய முடியும் வேறு யாரும் செய்ய முடியாது. அனைவருக்கும் சத்கதியை வழங்கக் கூ,டிய வள்ளல் ஒருவரே. அனைவருக்கும் என்ற வார்த்தையை கண்டிப்பாகப் போட வேண்டும். மிகவும் சகஜமாக புரிய வைக்கப்படுகிறது. ஆனால் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் மிகவும் குறைவானவர்களே இருக்கிறார்கள். பிரஜைகள் நிறைய உருவாகிக் கொண்டே இருக்கிறார்கள்.

மனிதர்கள் இறைவனின் பெயரால் நிறைய தானம்-புண்ணியங்கள் செய்கிறார்கள் என்றால் ஒரு பிறவிக்கு பலன் கிடைத்து விடுகிறது. இங்கே 21 பிறவிகளுக்கு கிடைக்கிறது. ஈஸ்வரனுக்காக தானம் செய்வதின்

மூலம் சக்தி கிடைக்கிறது. இவர்கள் ஈஸ்வரனை தெரிந்து கொள்ளவே இல்லையென்றால் சக்தியே இல்லை. ஹிந்துக்களின் குருமார்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களுக்கு பார்த்தீர்கள் என்றால், ஒருவர் தான். ஒருவருக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது. தர்மம் தான் சக்தி என்று சொல்லப்படுகிறது. இப்போது நீங்கள் தர்மத்தைப் புரிந்து கொண்டீர்கள் எனும்போது எவ்வளவு சக்தி கிடைக்கிறது. பாபா கூறுகின்றார் - குழந்தைகளே, அனைவருக்கும் இந்த வசீகர மந்திரத்தையே கொடுங்கள். பாபா குழந்தைகளுக்கு கூறுகின்றார் – நீங்கள் எங்கிருந்து வந்தீர்களோ அதை நினைவு செய்தீர்கள் என்றால் கடைசி நேரத்தில் புத்தியில் என்ன இருக்கிறதோ அப்படி நிலை ஆகி விடும். பாபாவை நினைவு செய்வதின் மூலம் தான் தூய்மையாக முடியும். பாவங்கள் அழியும். பாபா மற்றும் ஆஸ்தியை நினைவு செய்ய வேண்டும், அதன் மூலம் முழு சக்கரமும் புத்தியில் வந்து விடுகிறது. குடும்ப விவகாரங்களில் இருந்து கொண்டே தேகத்தின் அனைத்து சம்மந்தங்களிலிருந்தும் புத்தியை விலக்கி பாபாவோடு இணைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். பிறகு அது கடைசி சமயத்தில் கூட அதே நினைவு வரும். வேறு யாருடைய நினைவு வந்தாலும் தண்டனை அனுபவிக்க வேண்டி வரும். மேலும் பதவியும் குறைந்து விடும். எனவே உண்மையில்

கும்பம் என்று கல்பத்தின் சங்கமத்தை தான் சொல்லப்படுகிறது, ஆத்மாக்கள் மற்றும் பரமாத்மா சந்திக்கும் போது ஆகும். பரமாத்மா தான் வந்து இராஜயோகத்தைக் கற்றுக் கொடுக்கின்றார். அவர் மறுபிறவி இல்லாதவர். ஆனால் குழந்தைகள் கூட புரிந்து கொள்வதில்லை. ஸ்ரீமத்படி நடக்க வில்லை என்றால் துக்கம் எப்படி விலகும்? துக்கம் தூரம் போதல் என்றால் இராஜ்ய பதவி அடைவதாகும். ஸ்ரீமத்தின் மூலம் தான் இராஜ்யம் கிடைக்கிறது. ஸ்ரீமத்படி நடப்பதில்லை என்றால் கடைசியில் முடிந்து (ஆதரவற்றவர்களாகி) விடுகிறார்கள். யாருடைய தீபம் ஏற்றப்பட்டிருக்கிறதோ அவர்கள் தான் பிரியதர்ஷனுடன் செல்வார்கள். யாருடைய தீபம் மங்கிப்போய் இருக்கிறதோ அவர்கள் உடன் செல்ல முடியுமா? ஒப்பற்ற குழந்தைகள் தான் உடன் செல்வார்கள். மற்றவர்கள் வரிசைக்கிரமமாக பின்னால் வருவார்கள், ஆனால் அனைவருமே தூய்மையாவார்கள். அனைத்து ஆத்மாக்களும் ஒரே மாதிரி சக்திமிக்கவர்களாக இருக்க முடியாது. ஒவ்வொரு ஆத்மாவினுடைய நடிப்பும் அவரவருடையதாகும். ஒரே மாதிரி பதவி கிடைக்காது. கடைசியில் அனைவருடைய நடிப்பும் தெளிவாகி விடும். மரம் எவ்வளவு பெரியதாக இருக்கிறது, எவ்வளவு பேர் முக்கியமானவர்களாக இருக்கிறார்கள்! முக்கியமானது பெரிய-பெரிய கிளைகள் இருக்கின்றன.

அவை பார்ப்பதற்கு தெரிய வரும். முக்கியமானது அடித்தளமாகும். மற்றவை அனைத்தும் பிறகு வருகின்றன, அவற்றில் சக்தி குறைவாக இருக்கிறது. சொர்க்கத்தில் அனைவரும் வர முடியாது. பாரதம் தான் சொர்க்கமாக இருந்தது. பாரதத்திற்குப் பதிலாக ஜப்பான் சொர்க்கமாகி விடும் என்பது கிடையாது. அப்படி நடக்க முடியாது. நல்லது!

இனிமையிலும் இனிமையான பாப்தாதா அல்லது தாய்-தந்தையின் காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான ஞான நட்சத்திரங்களான குழந்தைகளுக்கு அன்பு- நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

## இரவு வகுப்பு - 24.04.1968

வேறு எந்த தர்ம ஸ்தாபகர் யாரானாலும் அனைவருக்கும் நன்மை செய்ய முடியாது என்பது குழந்தை களுக்குப் புரிய வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் வருகிறார்கள் என்றால், அனைவரையும் அழைத்து வருகிறார்கள். யார் விடுவித்து வழிகாட்டுகிறாரோ அவருக்குத் தான் புகழாகும். அவர் (சிவபாபா) பாரதத்தில் தான் வருகின்றார். எனவே பாரதம் அனைத்திலும் உயர்ந்த தேசமாகும். பாரதத்தை அதிகம் மகிமை பாட வேண்டும். பாபா தான் வந்து அனைவரையும் சத்கதி அடைய வைக்கின்றார்,

அப்போது தான் அமைதி ஏற்படுகிறது. சிருஷ்டியின் ஆரம்பத்தில் உலகத்தில் அமைதி இருந்தது, சொர்க்கத்தில் ஒரு தர்மம் இருந்தது. இப்போது அனேக தர்மங்கள் இருக்கின்றன. பாபா தான் வந்து அமைதியை ஸ்தாபனை செய்கின்றார். கல்பத்திற்கு முன்போலவே செய்கின்றார். குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானம் கிடைத்திருக்கிறது எனும்போது ஞானத்தின் பால் சிந்தனை செல்கிறது. வேறு யாருக்கும் புத்தியின் சிந்தனை செல்வதில்லை. இதையும் நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். தேக-அபிமானத்தின் காரணத்தால் தேகத்தையே பூஜிக்கிறார்கள். ஆத்மா மறுபிறவி கண்டிப்பாக இங்கே தான் எடுக்கும் அல்லவா?. ஒருவர் தான் தூய்மையாக இருக்கின்றார் என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். பாபா தான் மறைமுகமான ஞானத்தைக் கொடுக்கின்றார். அதன்மூலம் அனைவருக்கும் சத்கதி ஏற்பட்டு விடுகிறது. மற்றபடி ஹனுமன் அல்லது கணேசரைப் போல் யாரும் இருப்பதே இல்லை. இவர்கள் அனைவரையும் பூஜாரி என்று சொல்லப்படுகிறது. நல்லது.

ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தை அல்லது தாதாவின் அன்பு நினைவுகளும் இரவு வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீக தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:-

1 ) தண்டனையிலிருந்து காத்துக் கொள்ள தேகத்தின் அனைத்து சம்பந்தங்களிலிருந்தும் புத்தியின் தொடர்பை நீக்கி ஒரு பாபாவிடம் இணைக்க வேண்டும். கடைசி சமயத்தில் பாபாவைத் தவிர வேறு யாரும் நினைவு வரக்கூடாது.

2) நிரகங்காரியாக ஆகி அமைதியில் இருந்து முட்களை மலர்களாக்க உழைக்க வேண்டும். ஸ்ரீமத்படி கண்ணில்லாதவர்களுக்கு ஊன்றுகோலாக ஆக வேண்டும். தூய்மையாக ஆகி மற்றவர்களையும் தூய்மையாக்க வேண்டும்.

வரதானம்:-

பேச்சின் கூடவே மனதின் மூலமாக சக்திசாலியான சேவை செய்யக்கூடிய சுலபமான வெற்றி மூர்த்தி ஆகுக.

எவ்வாறு பேச்சின் மூலம் செய்யும் சேவையில் சதா பிஸியாக (சுறுசுறுப்பாக) இருப்பதற்கான அனுபவி ஆகிவிட்டீர்களோ, அவ்வாறே ஒவ்வொரு சமயமும் பேச்சின் கூடவே மனதின் சேவையும் தானாக நடைபெற வேண்டும். மனதின் சேவை என்றால் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும்

தானாகவே சுபபாவனை மற்றும் சுபவிருப்பத்தின் சுத்தமான அதிர்வலைகள் தனக்கும் மற்றும் பிறருக்கும் அனுபவம் ஆக வேண்டும். மனதில் இருந்து ஒவ்வொரு நேரமும் அனைத்து ஆத்மாக்களுக்காகவும் ஆசீர்வாதங்கள் வந்துகொண்டே இருக்க வேண்டும். மனதின் சேவை செய்வதனால் பேச்சின் சக்தி சேமிப்பாகிவிடும் மற்றும் இந்த மனதினுடைய சக்திசாலியான சேவை சுலபமாக வெற்றி மூர்த்தி ஆக்கிவிடும்.

சுலோகன்:-

தனது ஒவ்வொரு நடத்தை மூலம் தந்தையின் பெயரைப் புகழடையச் செய்யக்கூடியவர்களே உண்மையிலும் உண்மையான இறை சேவகர்கள் ஆவார்கள்.